**செய்தி வெளியீடு எண்: 294** **நாள் : 15.06.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி இன்று (15.06.2016) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

இவ்ஆய்வின் போது தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலர் திரு.த.உதயசந்திரன்,இ.ஆ.ப., , இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குநர்(மக்கள் தொடர்பு)(பொ) திருமதி.டி.ஆர்.ஜெயஸ்ரீ ஆகியோர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ரூ. 4.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் (Animation and Visual Effects) பாடப்பிரிவிற்கான புதிய வகுப்பறைக் கட்டடங்களை பார்வையிட்டார். மேலும் இப்பாடப்பிரிவிற்காக ரூ.3.83 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ள நவீன கருவிகள் மற்றும் அதன் உபகரணங்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டார்.

ரூ.2 கோடி மதிப்பீட்டிலான கூடுதலாக கட்டப்பட்ட புதிய மாணவர் விடுதியினையும், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் விடுதி மாணவர்களின் பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யப்பட்ட அறைகலன்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டார்.

மேலும், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தரமணி வளாகத்தில் செயல்படத் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, இந்நிறுவன வளாகத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றையும், இந்நிறுவனத்தில் ரூ.93 இலட்சத்தில் புனரைமைக்கப்பட்ட ரிச் மேன் ஹவுஸ், ரூ.90 லட்சத்தில் டப்பிங் தியேட்டர், ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் முன்காண் திரையரங்கம் மற்றும் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் முன்காண் திரையரங்கில் நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி பார்கோ புரொஜெக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் புதுப்பிக்கப்பட்ட பணிகளையும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 5 ஆண்டில் மாணவர் நலனுக்காக எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு மட்டும் ரூ.13.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இந்நிறுவனத்தை மேம்படுத்தியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மாணவர்கள் நலனுக்காக உருவாக்கிய வாய்ப்பினை பயன்படுத்தி, பயனடையுமாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை.**